நாள்- 27.07.2023

Case No.OS.39/2017 (DW1 Cross )

DW.1- துரைசாமி – வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி கண்ணன் என்னுடைய சகோதரர் என்றால் சரிதான். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. வாதி எந்த சொத்து குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கில் எதிர்வழக்குரை என்ன சொல்லியுள்ளேன் என்றால் எனக்கும், என் சகோதரருக்கும் நிலத்தில் தகராறு மற்றும் மனை தகராறு அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த சொத்து பற்றி அந்த வழக்கில் சொல்லவில்லை. துரைசாமி கவுண்டருடைய பிள்ளைகள் துரை (எ) துரைசாமி மற்றும் கண்ணன் ஆகிய இருவரும் பிள்ளைகள் என்றால் சரிதான். நானும், என் சகோதரரும் பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரம், 7.12.1999 ல் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ல் மூதாதையைர் சொத்து குறித்து பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் மூதாதையர் சொத்து, அரசாங்கத்தில் பெற்ற சொத்து, நாங்கள் கிரையம் பெற்ற சொத்து ஆகியவற்றினை பாகப்பிரிவினை செய்து கொண்டோம். எங்களுக்கு என்னென்ன சொத்துக்கள் , சர்வே எண்கள், விஸ்தீரனம் கிடைத்தது என்று தெரியும். . 480/10, 15 ஆகிய இரு சர்வே எண்களும் பாகப்பிரிவினை பத்திரம் பி.வா.சா.ஆ.1 ல் உள்ளதா என்றால் இல்லை. 480/10, 15 ஆகிய இரு சர்வே எண்களும் கொண்ட வீட்டுமனைகள், வா.சா.ஆ.1 எங்களுக்கு பொதுவாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஐ பொறுத்து பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் வாதியின் மீது அசல் வழக்கு எண். 19/2020 என்ற வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் பாகப்பிரிவினை செல்லாது என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாதி மோசடி செய்துவிட்டார் என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கில் சர்வே எண்கள் 480/10, 15 ஆகியவை சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். 480/10, 480/15 எனக்கும், வாதிக்கும் அரசாங்கத்தால் கூட்டுப்பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான் அதில் எனக்கும், வாதிக்கும் சமபாகம் உண்டு என்றால் சரிதான். அசல் வழக்கு 19/2020 இந்த விவரங்களை சொல்லி நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 2017 ல் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 2020 ல் நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. வாதி தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை படி வாதிக்கு சமபாகம் உண்டு என்றும் தாவாபடி தீர்ப்பாகவேண்டும் என்று சொன்னால் எல்லா சொத்திலும் பாகப்பிரிவினை

சரிபாகமாக கிடைக்கவேண்டும். இந்த சொத்து குறித்து எந்தவித செட்டில்மென்ட் என் மகன் , பேரப்பிள்ளைகள் மீது எழுதி வைக்க எந்தவிதமான அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும் ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.